செய்தி வெளியீடு எண்:312 நாள் :29.06.2015

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (29.6.2015) கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையிலான 10.15 கி.மீ உயர்த்தப்பட்ட வழித்தடத்தில் சென்னை மெட்ரோ இரயிலின் பயணிகள் சேவையைக் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். மேலும், சென்னை மெட்ரோ இரயிலின் கோயம்பேடு பணிமனை மற்றும் கோயம்பேடு, சென்னை புறநகர்ப் பேருந்து நிலையம் (CMBT), அரும்பாக்கம், வடபழனி, அசோக்நகர், ஈக்காட்டுத்தாங்கல் மற்றும் ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இரண்டு வழித்தடங்களில் – அதாவது வழித்தடம் - 1 (23.085 கி.மீ.) வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரையிலும், வழித்தடம் -2 (21.961 கி.மீ.) சென்னை சென்ட்ரலிலிருந்து புனித தோமையார் மலை வரையிலும் சென்னை மெட்ரோ ரெயில் இயங்கும் வகையில் வழித்தடங்கள் அமைக்கப்படுகின்றன.

மாநில மற்றும் மத்திய அரசுகள் ஒப்புதலளித்தபடி இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான உத்தேசச் செலவு 14,600 கோடி ரூபாய் ஆகும். மத்திய அரசு திட்ட மதிப்பீட்டில் 15 சதவீதத்தைப் பங்கு மூலதனமாகவும், 5 சதவீதத்தைச் சார்நிலைக் கடனாகவும் வழங்குகிறது. அதே போன்று மாநில அரசும் திட்டமதிப்பீட்டில் 15 சதவீதத்தைப் பங்கு மூலதனமாகவும், 5.78 சதவீதத்தைச் சார்நிலைக் கடனாகவும் அளித்து வருகின்றது. மீதமுள்ள 59.22 சதவீதம் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையிடமிருந்து (Japan International Cooperation Agency) கடனாகப் பெறப்படுகின்றது.

மாநில அரசு தனது பங்குத் தொகையை ஆண்டுதோறும் தொடர்ந்து வழங்கி வந்துள்ளது. மாநில அரசு தனது பங்கு முழுவதையும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்கிவிட்டது.

2007-08 முதல் 2010-11 வரையில் இத்திட்டத்திற்கு செலவிடப்பட்ட தொகை 1,143.31 கோடி ரூபாய் ஆகும். தற்போது வரை செலவிடப்பட்ட தொகை 10,751.94 கோடி ரூபாய் ஆகும். அதாவது கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 9,608.63 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மே, 2011 இல் 3 சதவீதமாக இருந்த ஒட்டு மொத்த செயலாக்க சாதனை 76 சதவீதமாக தற்போது உயர்ந்துள்ளது. மேலும், இத்திட்டத்திற்குத் தேவையான அரசு நிலங்களை மாற்றுதல், நிலம் கையகப்படுத்துதல், போக்குவரத்து மற்றும் பயன்பாடுகளை மாற்றியமைத்தல் மற்றும் பல்வேறு சட்டப்படியான ஒப்புதல்களை பெறுவதற்கு மாநில அரசும் அதன் சார்பு நிறுவனங்களும் தொடர்ந்து தங்களது ஒத்துழைப்பை நல்கி வந்துள்ளன.

6.11.2013 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பிரேசிலிருந்து பெறப்பட்ட முதல் இரயில் பெட்டித் தொடரின் சோதனை ஓட்டத்தைக் கொடியசைத்து துவக்கி வைத்ததுடன் 110/33 கி.வோ உயர் மின் அழுத்த துணை மின் நிலையத்தையும் துவக்கி வைத்தார்கள்.

மெட்ரோ இரயில்வே (இயக்கம் மற்றும் பராமரிப்பு) சட்டம், 2002, பிரிவு 7 இன் கீழ் மெட்ரோ இரயில்வே பாதுகாப்பு ஆணையர், பெங்களூரு அவர்களை சென்னை மெட்ரோ

இரயிலின் ஆணையராக மத்திய அரசு நியமனம் செய்துள்ளது. அவர் அச்சட்டத்தின்படி ஆய்வினை மேற்கொண்டு மெட்ரோ இரயிலில் பொதுமக்கள் பயணம் மேற்கொள்வதன் பாதுகாப்பு குறித்த அறிக்கையை மத்திய அரசிற்கு அனுப்பியுள்ளார். இரயில்வே அமைச்சகம் (இரயில்வே வாரியம்) சில தொழில்நுட்பங்களைக் கையாளுகின்றது. உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இரயில்வே பாதுகாப்பு தலைமை ஆணையரிடம், மெட்ரோ இரயிலில் பயன்படுத்தப்படும் இரயில் பெட்டிகள் குறித்து ஆலோசனை நடத்தி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. பாதுகாப்பு ஆணையர் இறுதி ஆய்வுகளை கடந்த மாத இறுதியில் மேற்கொண்டு, தேவையான சட்டபூர்வமான பாதுகாப்பு அனுமதியை வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் தற்போது மெட்ரோ இரயில் இயக்கப்படுகிறது.

இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையிலான 10.15 கி.மீ உயர்த்தப்பட்ட வழித்தடத்தில் சென்னை மெட்ரோ இரயிலின் பயணிகள் சேவையைக் கொடியசைத்து துவக்கி வைத்ததுடன், சென்னை மெட்ரோ இரயிலின் கோயம்பேடு பணிமனை மற்றும் கோயம்பேடு, சென்னை புறநகர்ப் பேருந்து நிலையம், அரும்பாக்கம், வடபழனி, அசோக்நகர், ஈக்காட்டுத்தாங்கல் மற்றும் ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையங்களையும் துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு நிதி மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத்துறை அமைச்சர் திரு நத்தம் இரா. விசுவநாதன், மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ஆர். வைத்திலிங்கம், மாண்புமிகு நெடுஞ்சாலை, சிறு துறைமுகங்கள் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர், திரு.பி.பழனியப்பன், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு பி. தங்கமணி, ஜப்பான் நாட்டிற்கான சென்னையில் உள்ள தலைமைத் துணைத் தூதர், திரு.செய்ஜி பாபா, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் துணை தலைமை இயக்குநர் திரு T.இச்சிகுச்சி, மத்திய நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தின் இணைச் செயலாளர் திரு முகுந்த் சின்ஹா, தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷிலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை முதன்மைச் செயலாளர் திரு எஸ். கிருஷ்ணன், இ.ஆ.ப., சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு பங்கஜ் குமார் பன்சல், இ.ஆ.ப., இயக்குநர் (திட்டங்கள்) திரு ஆர். இராமநாதன், இயக்குநர் (அமைப்புகள் மற்றும் இயக்கம்) திரு எல். நரசிம் பிரசாத், இயக்குநர் (நிதி) திருமதி விஜயா காந்த மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*****

**வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.**
**நாள்:- 29.6.2015.**